2015 மார்ச் 31]

இருக்கக்கூடிய மாவட்ட திட்ட அலுவலர்கள் மூலமாக மையங்களுக்குப் போய்ச் சேர்க்கப்படுகிறது. இதுதான் நடைமுறையில் இருக்கின்ற பழக்கம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பகுதியிலே ஓர் அலுவலகம் தேவை என்று விரும்புகிறார். இருந்தாலும், மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்துருவைப் பெற்று, கட்டடங்கள் கட்டுவதற்கு உரிய ஆய்வுப் பணிகளை மேற்கொண்டு, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 95, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

95—

அரசு தொழில்நுட்பக் கல்லூரி

***32018**—டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு அருகில் ஆனைமலையிலுள்ள இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை நிலத்தில் அரசு தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு அருகில் ஆனைமலையிலுள்ள இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை நிலத்தில் அரசு தொழில்நுட்பக் கல்லூரி துவக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன் அவர்கள்.

டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆனைமலை என்பதை ஆனையடி என்று திருத்தம் செய்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்மநாபபுரம் தொகுதி, திருவட்டாறு ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட குமரங்குடி வருவாய் கிராமத்தில் சர்வே எண்கள் 128, 129 மற்றும் 131-ல் இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறைக்குச் சொந்தமான 89 ஏக்கர் நிலம் இருக்கிறது. இதில் சுமார் 25 ஏக்கர் நிலம் காலி இடமாகும். அந்த நிலம் திங்கள்சந்தை-திருவட்டாறு நெடுஞ்சாலை ஓரமாக, திருவட்டாறுக்கு மிக அருகில் உள்ளது. இப்பகுதியானது, கல்குளம், விளவங்கோடு வட்டங்களின் மையப் பகுதியாகும். மலைவாழ் மக்கள், ஆதி திராவிட மக்கள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் ஆகியோர் அதிக அளவில் இங்கு வாழ்ந்து வருகிறார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் தற்பொழுது ஒரேயொரு அரசு தொழில்நுட்பக் கல்லூரி, அதுவும் மாவட்டத்தின் தென்பகுதியான கோணம் என்ற இடத்தில் உள்ளது. ஆகவே, அடித்தட்டு சமுதாய மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, திருவட்டாறு பகுதிக்கு அருகில் ஆனையடியில் இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறைக்குச் சொந்தமான நிலத்தில் அரசு தொழில்நுட்பக் கல்லூரியை அமைக்க மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் முயற்சி எடுப்பார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-25

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கன்னியாகுமரி மாவட்டம், ஆனையடியில் இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறைக்குச் சொந்தமான இடத்தில் அரசு தொழில்நுட்பக் கல்லூரி துவங்கப்படுமா என்ற ஒரு கேள்வியைக் கேட்டிருக்கிறார். ஒரு இடம் இருப்பதால் அங்கே கல்லூரி துவங்க

வேண்டும் என்பது அவசியமில்லை. இருந்தாலும்கூட, தமிழகத்தைப் பொறுத்தவரையில், 502 பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் இருக்கின்றன. அதாவது, அரசு சார்பாக 41 பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளும், அரசு உதவி பெறும் கல்லூரிகளாக 34 தொழில்நுட்பக் கல்லூரிகளும், சுயநிதி கல்லூரிகளாக 406 கல்லூரிகளும், Hotel Management தொழிலாளர் நலத்தைக் காப்பது மற்றும் படங்கள் தயாரிப்பது சம்பந்தமான பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் 21-ம், ஆக மொத்தம் தமிழகத்தில் 502 பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் இருக்கின்றன. அந்தக் கல்லூரிகளில் மாணவர்கள் சேர்ந்து படிக்க 2,03,600 இடங்கள் இருக்கின்றன. கடந்த ஆண்டு மாணவர்களின் சேர்க்கை 1,19,755 ஆகும். ஆகவே, தமிழகத்தில் சென்ற ஆண்டே பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் மாணவர்கள் சேர்ந்து பயன்பெறுவதற்காக 83,415 காலியிடங்கள் இருக்கின்ற வேளையில், புதிதாக கல்லூரி துவங்குவது என்பது மிகவும் சிரமம். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டபடி, கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு சார்ந்த பலவகை தொழில்நுட்பக் கல்லூரி இருக்கிறது. அந்தக் கல்லூரியில் 600 இடங்கள் இருக்கின்றன. சென்ற ஆண்டு 520 மாணவர்கள் மட்டும்தான் சேர்ந்தார்கள். 80 இடங்கள் மாணவர்கள் சேர்க்கைக்காகக் காத்திருக்கின்றன. ஆகவே, அந்த வகையில், மக்களின் முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழகத்தில் தொலைதூரப் பகுதிகள் மற்றும் மலைவாழ் பகுதிகளில் வாழும் மிகவும் பின்தங்கிய மாணவர்கள் பயன்பெறும் வகையில், பல்வேறு இடங்களில் கடந்த ஆண்டு மட்டும் 11 பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளை ஒதுக்கித் தந்து பெருமை சேர்த்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்போது 83,415 இடங்கள் காலியாக இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கைக்கேற்ப, எதிர்காலத்தில் அங்கு தேவை இருப்பின், காலியாக இருக்கும் இடங்கள் எல்லாம் நிறைவு பெறுகிறபோது, அரசு சிந்தித்து முடிவு எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன் அவர்கள்.

டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறைக்குச் சொந்தமான சுமார் 25 ஏக்கர் நிலம் காலியாக இருக்கின்றது. அதில் தொழில்நுட்பக் கல்லூரியை அமைக்க 5 ஏக்கர் நிலத்திற்குக் குறைவாகத்தான் இடம் தேவைப்படுகின்றது. இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை, சமூக நலனைக் கருத்தில்கொண்டு பல கல்வி நிறுவனங்களை நடத்தி வருகின்றது. அரசு நிருவாகத்தின்கீழ் அறநிலையத் துறை இருக்கின்ற காரணத்தினால், மாணவ சமுதாயத்தின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக, கல்விச் சேவைக்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற வகையில் அறநிலையத் துறையின் அனுமதி பெற்று, மலைவாழ் மக்கள் பயன்பெறும் வகையில், அரசு தொழில்நுட்பக் கல்லூரியை அமைக்க மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளை ஆரம்பிக்க வேண்டுமென்று சொன்னால், 5 ஏக்கர் நிலம் தேவைப்படுகின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறைக்குச் சொந்தமான இடம் இருக்கின்றது என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறையைப் பொறுத்தவரையில், நிலத்தைக் கையகப்படுத்தி, அதனை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டும். திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்களில், வழிகாட்டி மதிப்பீடு மற்றும் சந்தை மதிப்பீடு என இரண்டு மதிப்பீடுகள் இருக்கின்றன. அதில் எந்த மதிப்பை இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை எடுத்துக்கொள்கிறதோ அந்த மதிப்பீட்டின் அடிப்படையில்தான் நிலம் கையகப்படுத்தப்பட்டு வருகின்றது. அந்த வகையில்கூட கடந்த ஆண்டு, திருத்துறைப்பூண்டி, நாகப்பட்டினம், வேப்பூர், காரிமங்கலம் போன்ற இடங்களில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் அமைப்பதற்காக இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறைக்குச் சொந்தமான நிலங்கள்

2015 மார்ச் 31]

கையகப்படுத்தப்பட்டு, தற்போது ஆணையும் வழங்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இடம் இருக்கின்றது, அங்கே கல்லூரி அமைக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இடம் இருப்பதைப் பற்றி இப்போது பிரச்சினையில்லை. தேவையிருப்பின், மாணவர்களுடைய எண்ணிக்கை அதிகரிக்கும்பட்சத்தில், அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை தொகுதிக்குட்பட்ட ராஜாமடத்தில் இருக்கக்கூடிய அரசு பொறியியல் கல்லூரியில் சில நாட்களாக குடிநீர்ப் பிரச்சினை இருக்கின்றது என்று சொல்கிறார்கள். பக்கத்து கிராமமான மகிழம்கோட்டை என்ற பகுதியிலிருந்துதான் குடிநீர் கொண்டு வரப்படுகிறது. தற்போது, குடிநீர் பற்றாக்குறை இருக்கின்றது என்கிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதனை ஆய்வு செய்து அங்கே நிரந்தரமாக குடிநீர் கிடைக்கக்கூடிய வகையில், குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க ஆவன செய்வார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை, ராஜாமடத்தில் இருக்கக்கூடிய அரசு பொறியியல் கல்லூரி ஓர் உறுப்புக் கல்லூரியாகும். அந்தக் கல்லூரியில் மணல் கலந்த, உப்பு கலந்த நீர் கிடைப்பதாகக் கண்டறியப்பட்டிருக்கிறது. ஆகவே, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் இதனை அறிவுறுத்தி, அந்தக் கல்லூரிக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து குடிநீர் வழங்குவதற்கு அறிவுறுத்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.